1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாக விவரம் கொடுத்தால், அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

கிருஷ்ணகிரியிலுள்ள பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண். 26—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம்-கிருஷ்ணகிரியில் ஏற்படுத்தியுள்ள பால் பவுடர் தொழிற்சாலை எப்போது முதல் தனது பணியினைத் துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலுள்ள பால் பொடி தயாரிக்கும் தொழிற் சாலை 1982 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படவுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டம், காவிரிப் பட்டிணம் பாதையில் கிருஷ்ணகிரியில் பால் பவுடர் தொழிற்சாலை இந்த ஆண்டில் செயல்படும் என்று தெரிவித் தார்கள். அதற்காக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் வறட்சிப் பகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால், அதே நேரத்தில் அந்தப் பால் பவுடர் தொழிற்சாலை எவ்வளவு தொகையில் அங்கே திட்டமிட்டு செயல்பட்டிருக்கிறது? அது இயங்குவதற்குப் பால் உற்பத்தி எவ்வளவு தேவை என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் உருவாக இருக்கிற பால் பவுடர் தொழிற்சாலை ஏற்கனவே 175 லட்சம் ரூபாய் அளவுக்கு முதலீடு செய்து அதனைத் துவங்குவதாக முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அந்தத் திட்டத் திற்கு வேறு மதிப்பீடு செய்து 275 லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு அதை உயர்த்தி விரைவில் அதனை முடிக்க இருக்கி றோம். ஏற்கனவே 175 லட்சத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்த அந்தத் திட்டத்திற்கு விலைவாசி உயர்வு மற்றப் பிரச்சினை காரணமாக மேலும் 100 லட்சம் கூடுதலாகச் செலவழிக்க இருப்பதன் காரணமாக, அதாவது இரண்டே முக்கால் கோடி அளவுக்குத் திட்டம் தீட்டி கூடுதல் 100 லட்சம் ரூபாயை உள்ள டக்கிய திருத்திய மதிப்பீட்டுக்காக மத்திய அரசு ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். அதுவும் கிடைத்துவிடும் என்று கருது

கிறோம். ஒப்புதல் கிடைத்தவுடன் 1982 இறுதிக்குள் அது செயல்படும். அப்படிச் செயல்படுகிற அந்தத் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ ஒரு லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து பால்பவுடர் செய்கிற வகையில் கொள்திறன் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : ஒரு லட்சம் லிட்டர் பால் கொள் முதல் செய்து இயங்கினால்தான் அந்தப் பால் பவுடர் தொழிற் சாலை இயங்க முடியும் என்ற நிலையில், இப்பொழுது சராசரி யாக 25,000 லிட்டர்தான் உற்பத்தி இருக்கிறது என்ற நிலையில் பால் உற்பத்தியை ஒரு லட்சம் லிட்டர் அளவுக்குச் செய்ய வேண்டிய வழி வகைகளை முன் கூட்டியே செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்காகத்தான் ஆங்காங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி வருகிறோம். அதைப் போலவே பால் விவசாயி களுக்குத் தேவைப்பட்ட மாடுகளைப் பல்வேறு திட்டங்கள் வாயிலாகக் கொடுத்து வருகிறோம். இப்படி உருவாகுகிற போது நம்முடைய அந்தக் குறியீடு நிறைவேறும் என்று கருதுகிறேன்.

திருச்செந்தூர் தாலுக்கா பாரஸ்ட் தேரியிலுள்ள பனை மரங்களினால் கிடைத்த வருமானம்.

*வினா எண். 27— திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகா பாரஸ்டு தேரியில் உள்ள பனை மரங்களினால் எந்தவிதமான வருமானமும் அரசுக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அங்கு பனை மரக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி பனைப்பொருள் தயாரிப்பது பற்றிய திட்டம் ஏதும் மேற்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை. தேரியில் உள்ள பன்னிரண்டு குத்தகைப் பிரிவுகள் குத்தகை காலம் 1—1—1979 முதல் 31—12—1982 முடிய ஆண்டுக்கு ரூ. 76·572 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS